## ஆன்மிக சிந்தனை

தியானத்திலிருந்து ஞானம் உதயமாகிறது. தியானமில்லாவிடில் ஞானம் குறைகிறது. ஆக்கமும் அழிவும் வரக்கூடிய இந்த இரு வழிகளையும் அறிந்து ஞானம் பெருக்கும் வழியை மனிதன் மேற்கொள்ளட்டும்.

– கௌதம புத்தர்

சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

– ரோமர் 1:18

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், அற்பமானதாகக் கருதப்படும் பாவங்கள் குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில், ஒருவரிடம் அந்த (சிறு) பாவங்கள் திரண்டால் இறுதியில் அவை அவரை அழித்து விடும்.

– நூல் : அஹ்மத்

## இன்றும் நாளையும்

### செவ்வாய்க்கிழமை

(25–07–2023)

**சோபகிருது ஆண்டு, ஆடி–9**

*பிறை:* வளர்பிறை

| | |
|---|---|
| திதி | சப்தமி காலை 11.24 வரை பிறகு அஷ்டமி. |
| நட்சத்திரம் | சித்திரை இரவு 8.57 வரை பிறகு சுவாதி. |
| யோகம் | சித்தயோகம் |
| ராகுகாலம் | பிற்பகல் 3.00 – 4.30 மணி. |
| எமகண்டம் | காலை 9.00 – 10.30 மணி. |
| சூலம் | வடக்கு. |
| நல்ல நேரம் | காலை 8 – 9 மணி. மாலை 5 – 6 மணி. |

**இன்றைய விசேஷம்:** சுவாமிமலை முருகப் பெருமான் பேராயிரம் கொண்ட தங்கப்பூமாலை சூடியருளல். சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் விருஷப வாகனத்தில் பவனி. பெருமிழலைக்குறும்ப நாயனார் குரு பூஜை. மதுரை மீனாட்சியம்மன் கிளி வாகனத்தில் பவனி. வடமதுரை ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் அன்ன வாகனத்தில் புறப்பாடு. வடபழனி, திருப்போரூர், கந்தகோட்டம், குன்றத்தூர், வல்லக்கோட்டை தலங்களில் முருகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம்.

| | |
|---|---|
| மேஷம் | லாபம் |
| ரிஷபம் | மகிழ்ச்சி |
| மிதுனம் | வரவு |
| கடகம் | உவமை |
| சிம்மம் | உற்சாகம் |
| கன்னி | ஆதரவு |
| துலாம் | செலவு |
| விருச்சிகம் | வெற்றி |
| தனுசு | போட்டி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | கடமை |
| மீனம் | இன்பம் |

### புதன்கிழமை

(26–07–2023)

**சோபகிருது ஆண்டு, ஆடி–10**

*பிறை:* வளர்பிறை

| | |
|---|---|
| திதி | அஷ்டமி காலை 11.52 வரை பிறகு நவமி. |
| நட்சத்திரம் | சுவாதி இரவு 9.38 வரை பிறகு விசாகம். |
| யோகம் | சித்தயோகம் |
| ராகுகாலம் | நண்பகல் 12.00 – 1.30 மணி. |
| எமகண்டம் | காலை 7.30 – 9.00 மணி. |
| சூலம் | வடக்கு. |
| நல்ல நேரம் | காலை 6 – 7 மணி. மாலை 4 – 5 மணி. |

**இன்றைய விசேஷம்:** திருப்பதி ஸ்ரீ ஏழுமலையப்பன் சகஸ்ர கலசாபிஷேகம். சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் வெள்ளிச் சப்பரத்தில் புறப்பாடு. மதுரை மீனாட்சியம்மன் புஷ்பப் பல்லக்கில் பவனி. சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை. சோமான் பெருமான் நாயனார் குருபூஜை. திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் ராமாவதாரம், இரவு அனுமந்த வாகனத்தில் பவனி. நயினார் கோவில் ஸ்ரீ சௌந்தரநாயகியம்மன் மஞ்சல் நீராட்டு விழா. சத்தியமூர்த்தி நாயனார் குருபூஜை. பத்ராசலம் ஸ்ரீ ராமபிரான் புறப்பாடு. மதுராந்தகம் ஏரி காத்த ஸ்ரீ கோதண்டராம சுவாமி காலை சிறப்பு திருமஞ்சன அலங்கார சேவை.

| | |
|---|---|
| மேஷம் | பாராட்டு |
| ரிஷபம் | பரிசு |
| மிதுனம் | நற்செயல் |
| கடகம் | நன்மை |
| சிம்மம் | ஆதரவு |
| கன்னி | வெற்றி |
| துலாம் | ஆர்வம் |
| விருச்சிகம் | முயற்சி |
| தனுசு | ஆக்கம் |
| மகரம் | வரவு |
| கும்பம் | நலம் |
| மீனம் | பக்தி |

# ராயல் கேர் மருத்துவமனை தலைவருக்கு விருது



கோவை ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் கே.மாதேஸ்வரனுக்கு விருது வழங்குகிறார் மாநகர காவல் ஆணையர் வே.பாலகிருஷ்ணன்.

**கோவை, ஜூலை 24:** கோவை ராயல் கேர் மருத்துவமனைத் தலைவரின் சூழலியல் செயல்பாடுகளைப் பாராட்டி அவருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

கோவை ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் கே.மாதேஸ்வரன், உயிரின் சுவாசம் என்ற அறக்கட்டளையின் அறங்காவலராக இருக்கிறார். இந்த அறக்கட்டளை மூலம் லட்சக்கணக்கான மரக்கன்றுகள் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் நடப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கோவையில் ரேடியோ மிர்ச்சி பண்பலை வானொலி சார்பில் அண்மையில் நடைபெற்ற விழாவில், டாக்டர் கே.மாதேஸ்வரனுக்கு வான்முகில் தொண்டர்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த விருதை மாநகர காவல் ஆணையர் வே.பாலகிருஷ்ணன் அவருக்கு வழங்கினார்.

மேலும், இந்த விழாவில் கரோனா காலத்தில் சிறப்பாக பணியாற்றிய ராயல் கேர் மருத்துவமனையைச் சேர்ந்த 47 மருத்துவர்களுக்கு கோவிட் வாரியர்ஸ்' என்ற விருது வழங்கப்பட்டது. விழாவில், ஏராளமான மருத்துவர்கள், அவர்களின் குடும்பத்தினர் பங்கேற்றனர்.

# அரிசி கிலோவுக்கு ரூ.10 வரை உயர்வு

**சென்னை, ஜூலை 24:** தமிழகத்தில் அரிசி விலை கிலோவுக்கு ரூ. 8 முதல் ரூ.10 வரை உயர்ந்துள்ளது. காய்கறிகளின் விலை உயர்வைத் தொடர்ந்து, தற்போது அரிசி விலையும் கடுமையாக உயர்ந்திருப்பது பொதுமக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு கிலோ ரூ.40–க்கு விற்பனையான அரிசி தற்போது ரூ.60 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல் சில்லறை விற்பனையில் தற்போது அரிசி விலை கிலோவுக்கு ரூ. 8 முதல் ரூ.10 வரை உயர்ந்துள்ளது.

26 கிலோ மூட்டை அரிசி கடந்த மாதத்தில் ரூ.1,400–க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது ரூ.1,600 ஆக உயர்ந்துள்ளது. 2 ஆவது ரக சாப்பாட்டு அரிசி ரூ.1,200 –இல் இருந்து ரூ.1,400–ஆகவும், 26 கிலோ மூட்டை இட்லி அரிசி ரூ.850 –இல் இருந்து ரூ.950 ஆகவும் உயர்ந்துள்ளது. சில்க்கி பச்சரிசி 26 கிலோ ரூ.1,600 ஆகவும், புழுங்கல் அரிசி 26 கிலோ ரூ.1,500 வரையும் உயர்ந்துள்ளது.

அதே போல் நாட்டு பொன்னி ஒரு கிலோ ரூ.45– இல் இருந்து ரூ.55 ஆகவும், கர்நாடக பொன்னி ஒரு கிலோ ரூ.42– இல் இருந்து ரூ.50 ஆகவும், பிரியாணி அரிசி ஒரு கிலோ ரூ.85– இல் இருந்து ரூ.95 ஆகவும் உயர்ந்துள்ளது. இவ்வாறாக அத்தியாவசிய உணவு பொருள்களின் திடீர் விலை உயர்வால் பொதுமக்கள் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய அரசு அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அரசு அலுவலகங்களில் சைகை மொழிபெயர்ப்பாளர்: மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் வலியுறுத்தல்



கோவை ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மாற்றுத்திறனாளிகள்.

**கோவை, ஜூலை 24:** அரசு அலுவலகங்கள், பொது இடங்களில் சைகை மொழிபெயர்ப்பாளர் நியமிக்க வலியுறுத்தி தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் ஆட்சியர் அலுவலகம் முன் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு காது கேளாதோர், வாய் பேசாதோர், மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் சார்பில் 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோவை ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், பொது இடங்களில் சைகை மொழிபெயர்ப்பாளர்கள் நியமிக்க வேண்டும். தொகுப்பூதியத்தில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகளை நிரந்தரமாக்க வேண்டும். அரசுப் பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

தனியார் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தர வேண்டும். தங்களது குடும்பங்களின் குடும்ப அட்டைகளை முன்னுரிமை (பிஎச்எச்) அட்டையாக மாற்றித்தர வேண்டும். இலவச வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும். தீவிரப் பாதிப்புள்ள காது கேளாதோர் மற்றும் வாய் பேசாதோரை கடும் ஊனமுற்றோர் பட்டியலில் இணைத்து மாதாந்திர உதவித்தொகை ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

இதில் 50க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.

# 2 லாரிகள் மோதி விபத்து



விபத்துக்குள்ளான லாரிகள்.

**மதுக்கரை, ஜூலை 24:** கோவை போடிபாளையம் அருகே பள்ளத்தில் இறங்கிய டேங்கர் லாரி மீது மற்றொரு லாரி மோதி விபத்துக்குள்ளானது தொடர்பாக போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

உத்தர பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் ராஜேஷ்குமார் (35). லாரி ஓட்டுநரான இவர், சென்னையில் இருந்து இயற்கை எரிவாயுவை ஏற்றிக் கொண்டு கேரள மாநிலம், கொச்சிக்கு கோவை வழியாக திங்கள்கிழமை சென்று கொண்டிருந்தார்.

கோவை, போடிபாளையம் அருகே சென்றபோது எதிரே வந்த கார் மீது மோதாமல் இருக்க ராஜேஷ்குமார் லாரியை திருப்பியுள்ளார். கட்டுப்பாட்டை இழந்த லாரி சாலையோரப் பள்ளத்தில் இறங்கியது. இதைத் தொடர்ந்து, பின்னால் வந்த மற்றொரு லாரி டேங்கர் லாரியின் மீது மோதியது.

இதில், டேங்கர் லாரியில் இருந்து இயற்கை எரிவாயு வெளியேறியதால் பரபரப்பு ஏற்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த மதுக்கரை போலீஸார் மற்றும் தீயணைப்புத் துறையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். மேலும், பொக்லைன் வாகனம் வரவழைக்கப்பட்டு லாரிகள் அப்புறப்படுத்தப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக மதுக்கரை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோவையில் 15 பவுன் திருட்டு

**கோவை, ஜூலை 24:** கோவையில் பால் விற்பனையாளர் வீட்டில் 15 பவுன், ரூ.5,000 ரொக்கம் திருடுபோனது குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

கோவை, சிங்காநல்லூர் அருகே உள்ள மசக்காளிபாளையத்தைச் சேர்ந்தவர் சதாசிவம் (60), ஆவின் பால் விற்பனையாளர். இவர், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பால் விற்பனைக்காக சென்றுவிட்ட நிலையில், அவரது மகன் வீட்டைப் பூட்டிவிட்டு வழக்கமாக வைக்கும் இடத்தில் சாவியை மறைத்து வைத்துவிட்டு வெளியே சென்றுள்ளார்.

இதனை நோட்டமிட்டிருந்த மர்ம நபர் சாவியை எடுத்து வீட்டின் கதவைத் திறந்து, பீரோவில் இருந்த சங்கிலி உள்ளிட்ட 15 பவுன், ரூ.5,000 ரொக்கம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளார்.

வீட்டுக்குத் திரும்பிய சதாசிவம் பீரோவில் இருந்த நகைகள் திருட்டுப்போயிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். பின்னர், சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# 48ஆவது துப்பாக்கிச் சுடுதல் போட்டி: என்.சி.சி. மாணவர்கள் வரலாற்று சாதனை

**சென்னை, ஜூலை 24:** 48ஆவது தமிழ்நாடு துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் தமிழக என்.சி.சி. மாணவர்கள் 76 பதக்கங்களை வென்று புதிய சாதனை படைத்துள்ளனர்.

மதுரையில் ஜூலை 17ஆம் தேதி முதல் 23ஆம் தேதிவரை நடைபெற்ற துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கி சுடும் போட்டியில், தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்குநரகத்தைச் சேர்ந்த 30 மாணவர்கள் அடங்கிய அணி பங்கேற்றது. இப்போட்டியில், இதுவரை இல்லாத வகையில், தமிழ்நாடு என்.சி.சி. மாணவர்கள் புதிய சாதனையாக மொத்தம் 76 பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில், 33 தங்கம், 28 வெள்ளி மற்றும் 15 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும். தனிநபர் மற்றும் குழு ஆகிய இரு பிரிவுகளிலும் அவர்கள் இச்சாதனையை புரிந்துள்ளனர்.

தமிழக வரலாற்றில் என்.சி.சி. அணி இதுவரை பெற்றதில் அதிக பதக்கங்கள் இதுவாகும். இந்த என்.சி.சி. மாணவர்கள் 2023 ஏப்ரல் –மே மாதங்களில் நடத்தப்பட்ட மாநில அளவிலான சோதனைகளுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# ஓட்டுநரைத் தாக்கிய வனவர், வேட்டைத் தடுப்புக் காவலர் பணியிடை நீக்கம்



வேட்டைத் தடுப்புக் காவலர் மூர்த்தி, தீபக் குமார்.

**சத்தியமங்கலம், ஜூலை 24:** பண்ணாரி வனச் சோதனை சாவடியில் லஞ்சம் தர மறுத்த ஓட்டுநரைத் தாக்கியதாக வனவர், வேட்டைத் தடுப்புக் காவலர் ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் - மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் தமிழக, கர்நாடக எல்லையில் உள்ள பண்ணாரியில் சத்தியமங்கலம் வனத் துறையின் சோதனைச் சாவடி உள்ளது.

வனப் பகுதியில் பயணிக்கும் வாகனங்களுக்கு இந்த சோதனைச் சாவடியில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இந்த நிலையில் பண்ணாரி வனச் சோதனை சாவடி வழியாக கடந்த 22ஆம் தேதி வாகனத்தில் சென்ற கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஓட்டுநரிடம் சோதனைச் சாவடி பணியில் இருந்த வனத் துறை ஊழியர்கள் வனவர் தீபக்குமார், வேட்டைத் தடுப்புக் காவலர் மூர்த்தி ஆகியோர் லஞ்சம் கேட்டு தகராறில் ஈடுபட்டதோடு, லஞ்சம் தர மறுத்த ஓட்டுநரை சரமாரியாகத் தாக்கி உள்ளனர்.

இது குறித்த விடியோ சமூக வலைதளங்களில் பகிரப்பட்டதோடு தொலைக்காட்சி மற்றும் நாளிதழ்களில் செய்தி வெளியானது. இதைத் தொடர்ந்து சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் இணை இயக்குநர் வெங்கடேஷ் (பொறுப்பு) இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டார்.

இதில், லஞ்சம் கேட்டு ஓட்டுநரைத் தாக்கிய வனவர் தீபக்குமார், வேட்டைத் தடுப்புக் காவலர் மூர்த்தி ஆகிய இருவரையும் பணியிடை நீக்கம் செய்து உத்தவிட்டுள்ளார்.

# இந்திய ஜனநாயகக் கட்சியின் மண்டல மாநாடு



கோவையில் நடைபெற்ற இந்திய ஜனநாயகக் கட்சியின் மண்டல மாநாட்டை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைக்கிறார் கட்சியின் இணை பொதுச் செயலாளர் லீமாரோஸ் மார்ட்டின். உடன் கட்சித் தலைவர் ரவி பச்சமுத்து, சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ்.பி.வேலுமணி, வானதி சீனிவாசன்.

**கோவை, ஜூலை 24:** இந்திய ஜனநாயகக் கட்சியின் கோவை மண்டல மாநாடு, அக்கட்சியின் தலைவர் ரவி பச்சமுத்து தலைமையிலும், பொதுச் செயலாளர் பேராசிரியர் பி.ஜெயசீலன் முன்னிலையிலும் காளப்பட்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அதிமுக தலைமை நிலையச் செயலரும், தொண்டாமுத்தூர் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினருமான எஸ்.பி. வேலுமணி, பாஜக தேசிய மகளிரணித் தலைவர் வானதி சீனிவாசன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் அம்மன் கே.அர்ச்சுணன், பி.ஆர்.ஜி. அருண்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாககலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் கட்சியின் பொருளாளர் ஜி.ராஜன், முதன்மை அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ்.வெங்கடேசன், தலைமை நிலையச் செயலாளர் வரதராஜன், மகளிரணிச் செயலாளர் அமுதா ராஜேஸ்வரன், இந்திய ஜனநாயகக் கட்சியின் அனைத்து மாவட்ட நிர்வாகிகள் மற்றும் பார்க்கவ குல முன்னேற்ற சங்கத்தின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டிற்கான ஏற்பாடுகளை கட்சியின் இணை பொதுச் செயலாளர் லீமாரோஸ் மார்ட்டின் செய்திருந்தார்.

# மணிப்பூர் கலவரம்: திமுக மகளிரணி ஆர்ப்பாட்டம்



கோவையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர்.

**கோவை, ஜூலை 24:** மணிப்பூர் கலவரத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய பாஜக அரசைக் கண்டித்து, கோவையில் திமுக மகளிரணி சார்பில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒருங்கிணைந்த திமுக மகளிரணி சார்பில் கோவை டாடாபாத் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலர் மாலதி நாகராஜ் தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில், மாநகர மேயர் கல்பனா ஆனந்தகுமார், மாவட்ட அமைப்பாளர்கள் கமலம், கனிமொழி, மங்கையர்க்கரசி, ரங்கநாயகி, ரதி, மண்டலக் குழுத் தலைவர்கள் லக்குமி இளஞ்செல்வி, மீனா லோகு, தெய்வானை தமிழ்மறை, தனலட்சுமி, கவுன்சிலர்கள், திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதில், மணிப்பூர் கலவரத்தை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும், தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியபடி கோஷங்கள் எழுப்பினர்.

# கோவையில் வழக்குரைஞர்கள் ஆர்ப்பாட்டம்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வழக்குரைஞர்கள்.

**கோவை, ஜூலை 24:** மணிப்பூரில் நடைபெற்ற பெண்கள் மீதான அத்துமீறலுக்கு கண்டனம் தெரிவித்து வழக்குரைஞர்கள் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் கே.எம்.தண்டபாணி தலைமை வகித்தார்.

இதில், மணிப்பூரில் பெண்கள் மீதான அத்துமீறலுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். மேலும், நீதிமன்றங்களில் அம்பேத்கரின் உருவப்படம் வைப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதற்கு கண்டனம் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் அகில இந்திய வழக்குரைஞர்கள் சங்க நிர்வாகி மு.ஆனந்தன், பியூசிஎல் அமைப்பு நிர்வாகி சேகர் அண்ணாதுரை, சமூக நீதி வழக்குரைஞர்கள் சங்க நிர்வாகி வெண்மணி, ஒருங்கிணைப்பாளர் ஜோதிகுமார், மூத்த வழக்குரைஞர்கள் அருள்மொழி, காந்தி, நிக்கோலஸ், பெண் வழக்குரைஞர்கள் சங்க நிர்வாகி ரேணுகா தேவி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரசு பேருந்தில் தவறவிட்ட ரூ.1 லட்சத்தை உரியவரிடம் ஒப்படைத்த ஓட்டுநர், நடத்துநருக்கு பாராட்டு



அரசுப் பேருந்தில் தவறவிட்ட ரூ.1 லட்சத்தை முதியவரிடம் ஒப்படைக்கும் நடத்துநர்.

**சூலூர், ஜூலை 24:** அரசுப் பேருந்தில் தவறவிட்ட ரூ.1 லட்சத்தை உரியவரிடம் ஒப்படைத்த கோவை அரசுப் போக்குவரத்துக் கழக ஓட்டுநர் மற்றும் நடத்துனரை போலீஸார் பாராட்டினர்.

கோவையில் இருந்து திருச்சிக்கு கோவை அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், திருச்சியில் இருந்து கோவைக்கு கடந்த வெள்ளிக்கிழமை வந்த அரசுப் பேருந்தில், குளித்தலையில் முதியவர் ஒருவர் இறங்கியுள்ளார். அவர், தனது உடைமைகளை பேருந்திலேயே விட்டுச் சென்றதும், அதில் ரூ.1 லட்சம் பணம் இருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து, பேருந்தை இயக்கிய ஓட்டுநர் பழனி, நடத்துநர் பொன்னுசாமி இருவரும் குளித்தலை காவல் நிலையத்துக்குச் சென்று பணத்தை ஒப்படைத்தனர். அப்போது, முதியவரும் தனது பணத்தைக் காணவில்லை என புகார் அளிக்க அங்கு வந்தார்.

இதையடுத்து, போலீஸார் முன்னிலையில் ரூ.1 லட்சம் பணம் உள்ளிட்ட முதியவரின் உடைமைகளை அவரிடம் அரசுப் பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துநர் ஒப்படைந்தனர். முதியவரின் பணத்தை ஒப்படைத்த ஓட்டுநர், நடத்துநரை போலீஸார் பாராட்டினர்.

# புலித்தோல், மண்ணுளி பாம்புகளை வைத்திருந்த நபர் கைது

**மதுக்கரை, ஜூலை 24:** கோவை அருகே புலித்தோல், மான் கொம்பு, மண்ணுளி பாம்புகளை வைத்திருந்த நபரை வனத் துறையினர் திங்கள்கிழமை கைது செய்தனர்.

கோவை, மருதமலை கோவில்மேடு பகுதியில் உள்ள நாட்டு வைத்திய சாலை ஒன்றில் புலித்தோல் வைத்திருப்பதாக கோவை வனச் சரக அதிகாரிகளுக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, சின்னதம்பிராஜ் (52) என்பவருக்குச் சொந்தமான வைத்தியசாலையில் கோவை வனச் சரகர் அருண் தலைமையிலான வனத் துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

இதில், புலித்தோல் இருந்ததுடன் தொடர் சோதனையில், உயிருடன் இரண்டு மண்ணுளி பாம்புகள், இறந்த நிலையில் ஒரு மண்ணுளி பாம்பு, மான் கொம்பு ஆகியவை இருந்தது தெரியவந்தது.

விசாரணையில், புற்றுநோய் சிகிச்சைக்காக மண்ணுளி பாம்பை கொன்று அதில் கஷாயம் செய்து வைத்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து, சின்னதம்பிராஜை வனத் துறையினர் கைது செய்தனர்.